செ.வெ. எண்: 489 நாள்: 28.7.2011

**28-07–2011 அன்று நடைபெற்ற பொதுவிநியோக திட்ட பணிகள் குறித்த ஆய்வு கூட்டத்தில் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ் கண்ட அறிவுரைகள் வழங்கினார்கள்**

1. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஏழை எளிய மக்களுக்கு வழங்கும் இலவச அரிசி உரிய முறையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு சென்று அடைவதை உறுதி செய்ய வேண்டியது அலுவலர்களின் தலையாய கடமையாகும்.

2. நியாய விலை அங்காடிகளில் உண்மையான குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டுமே அரிசி வழங்கப்படவேண்டும். போலி பட்டியல் போட்டு அரிசி கடத்தும் அங்காடிப் பணியாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

3. பொது விநியோகத் திட்ட அரிசி பதுக்கல், கடத்தலில் ஈடுபடுவோர் கள்ளச்சந்தை தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்பு காவலில் வைக்கப்படுவார்கள்.

4. வட்ட வழங்கல் மற்றும் உதவி ஆணையர் அலுவலகங்களில் புதிய குடும்ப அட்டை கோரும் மனுக்கல் மீது முறையான விசாரணை மேற்கொண்டு தகுதியான மனுதாரர்களுக்கு 60 நாட்களுக்குள் புதிய குடும்ப அட்டை வழங்கப்படும். தகுதியற்ற மற்றும் இல்லாத நபர்களுக்கு குடும்ப அட்டை வழங்குவது கண்டுபிடிக்கப்பட்டால், குடும்ப அட்டை வழங்குபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

5. குடும்ப அட்டைகளில் மாற்றம் கோரி வரும் பொது மக்களுக்கு அவற்றை விரைந்து செய்து கொடுக்க வேண்டும்.

6. போலி குடும்ப அட்டைகள் சுற்றில் உள்ளன. அலுவலர்கள் அவற்றை கண்டுப்பிடித்து உடன் களைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7. அரசு ஏழை மக்களுக்காக இலவசமாக வழங்கும் பொது விநியோகத்திட்ட அரிசியை முறைகேடாக வாங்கி பயன்படுத்தும் சிறு ஓட்டல்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

**வெளியீடு: –**

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.